[1971 அக்டோபர் 22

Flour mills in Tamil Nadu

* 21 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) the total number of flour mills in Tamil Nadu as on this date ;

(*b*) whether it is a fact that these mills are under the threat of closing down after the Central Government budget for the financial year 1971–72; and

(*c*) if so, the action taken by this Government in consultation with the Central Government to avert the situation?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) தமிழ் நாட்டில் 23 கோதுமை உருளை மாவு ஆலைகள் உள்ளன.

(இ) அத்தகைய தகவல் எதும் அரசிடம் இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that in the month of May immediately after the Budget, the Central Government announced that 10 per cent extra charge will be levied on maida per kilo, and immediately after that, whether it is a fact that a number of industrialists approached the Government or at least sent a petition to the Centre that it should be reduced ? Also when the Government was seized of the matter, as it indirectly increased the cost of the products out of maida like bread and other things, may I know whether the State Government gave any views on the subject or whether they interfered in this matter? May I know all the details?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் 10 பைசா ஒரு கிலோ மைதாவிற்கு விதித்தது உண்மை. ஆனால் உடனடியாக வாபஸ் பெற்றுவிட்ட காரணத்தினால் பிரச்னை எழவில்லை.

சிற்பக் கலைப் பயிற்சி நிலையங்கள்

*22 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிற்பக்கலைப் பயிற்சி நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

(இ) இவற்றில் எத்தகைய சிலைகள் செதுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழக அரசினரால் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மகாபலிபுரத்தில் கற்சிற்பங்கள் செய்வதற்குப் பயிற்சி கொடுக்க ஒரு பயிற்சி நிலையம் நடத்தப்பட்டு வருகின்றது.

(இ) மகாபலிபுரம் சிற்பக்கலைப்பயிற்சி நிலையத்தில் ஆகம சிற்ப நூல்களில் கூறியதற்கிணங்க பழங்காலக் கோவில்களில் காணப்படும் சிலைகளைப் போன்றவை செதுக்கப்படுகின்றன.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து சாமி சிலைகள் ஏராளமாகக் களவாடப்பெற்று மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வெளிநாட்டுக்காரர்கள் சாமிகளை அதிகமாக விரும்புகிறார்களா? அல்லது சிலையின் கலையை விரும்புகிறார்களா? கலையை விரும்பினால் நம்முடைய மகாபலிபுரத்திலுள்ள பயிற்சி நிலையத்திலிருந்து அவர்களுக்கு ஏற்ற சிலைகளை வடித்து இந்த அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்களெல்லாம் கலை உணர்ச்சியைத்தான் விரும்புகிறார்கள் என்று எண்ணுகிறேன். இங்கேயுள்ள முப்பத்து முக்கோடி கடவுள்களைப்பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் விரும்புவது புதிதாக உருவாக்கப்படும் சிலைகளை அல்ல. பழமையும், சிற்பக்கலையும் உயர்ந்த சிலைகளைத்தான் விரும்புகிறார்கள்.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, பிற்பட்ட நலக் குழுவின் அறிக்கையில் இப்படிப்பட்ட கலைத்திறன் கொண்ட தொழில் அழியாமல் இருக்க பல்வேறு நிலையங்களை உருவாக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை இந்த அரசு அறியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பின் தங்கிய வகுப்பு அமைச்சரைக் கேட்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரையில் மதுரை வடக்கு பகுதியிலே கல் தச்சுத் தொழிலாளர்கள் என்று இம்மாதிரி கல் செதுக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷப் பாதுகாப்பு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தொழிலில் பயிற்சி கொடுக்க பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்படுகிறது, நம்முடைய அரசால், யாராவது தொழில் தொடங்க முன்வந்தால் அரசாங்கம் அதைப் பரிசிலிக்கும்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: சார் நாதஸ்வரத்திற்குப் பயிற்சி கொடுப்பதைப் போல சிறபக் கலையைக் கற்றுக்கொள்பவர்களுக்கும் பண வசதி கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆண்டு ஒன்றுக்கு 10 பேர்கள் இந்தப் பயிற்சி நிலையத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய் விதம் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

Alanganallur Co-operative Cane Growers' Association

* 23 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries bep leased to state

(a) whether the Government have received a copy of the resolutions passed at a meeting of the Alanganallur Co-operative Cane Growers' Association, held at Alanganallur on 16th March 1970 regarding their grievances; and

(b) if so, the details thereof and the action taken thereon?